

Vol.21 | No. 7 | July 2017

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



St. Thomas, the Apostle of India

Pray for Us!



MISSION LEAGUE ANNIVERSARY
- JUNE 25



KUZHANDAI ISO IYAKKAM ANNIVERSARY
- JUNE 03



MINOR SEMINARY ACADEMIC YEAR INAUGURATION -
JUNE 09

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 21 No :7 July 2017

# இறையருள்
# IRAIARUL



## Editorial Board

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**
*Chief Editor*
**Fr. Joseph Santhosh**
*Executive Editor*
**Mr. Soundara Raj**
*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| உயர் பேராயரிடமிருந்து.... | 06 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 11 |
| Feast and B'days | 12 |
| குழந்தை ஈசோ | 13 |
| சிறுமலர் | 14 |
| இளையோர் இயக்கம் | 15 |
| வின்சென்ட் தே பவுல் | 16 |
| திருத்தலத் திருவிழா | 17 |
| மறைவட்டச் செய்திகள் | 18 |
| மறைமாவட்டச் செய்திகள் | 19 |
| Bishop's Engagements | 20 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/71/2017 30 June 2017

Greetings from Bishop's House, Thuckalay!

On 28 July we will celebrate the feast of St Alphonsa. At the Eparchial level, we shall celebrate her feast at the shrine dedicated to St Alphonsa at Nagercoil. The new Bishop of Kottar will preside over the Holy Eucharist on 28 July 2017. Our young people will undertake a Nadipayanam to the Shrine in order to show their love towards the Saint and to spread devotion to her among the people. As we are preparing for the celebration of her feast, it is fitting that we reflect briefly on her heroic life and copy some of her virtues into our own lives so that we too can walk the path of holiness that she joyfully tread.

The life of St Alphonsa reveals that in the cross, the meaninglessness of suffering can give way to a profound experience of the love of God and neighbour in our daily lives. She is a sign of the deep roots and the maturation of the Christian faith in India. It is worthwhile to note that St Alphonsa belonged to the Syro-Malabar church, which, like its Catholic and non-Catholic counterparts, is known for its extraordinary socio-cultural proximity to Hinduism. Alphonsa herself had as her best class companion a Hindu girl named Laxmikutty. Unlike the Semitic and western churches, the Church in India, especially of the St Thomas Christian tradition, holds a unique place for its interreligious, multi-cultural and socio-political interactions and mutual relationships. For this reason, the Universal Church raised Alphonsa to the veneration at the altar by officially declaring her as a person who shares in the communion of saints. She was also presented before the world as a shining example of how the mutual interaction of the apostolic vitality of a Church, which is intermingled with the local cultures, can lead to the blossoming of Christian dignity and sanctity. This should be an assurance and consolation, not only for Christians living these days when rampant religious intolerance overwhelms the country, but also for the people of other faiths.

The life of St Alphonsa resembles closely the life of St Theresa of Child Jesus. Both of these saints draw our attention to the fundamental reality and truth of Jesus

Christ as the only Son of God and the unique Saviour of the whole creation. St Alphonsa was a Franciscan Clarist nun. Her life though confined within the four walls of the FCC Convent at Bharananganam, was a tale of docility to God, to her fellow sisters, to her spiritual master, to her relatives and to the children around in the school. Although confined externally, it was her child like docility, which helped others feel and discover the mystery of the grace of sanctity at work in her.

The funeral sermon that Fr Romulus, her spiritual director, preached was nothing but wonderful exposition of the hidden sanctity of St Alphonsa. Among other things, Fr Romulus said: "With the most profound conviction in my heart and as one who has known this religious very intimately, I affirm that we are now participating in the last rites of a saintly person. If the world had realized her intrinsic worth, unprecedented crowds including hundreds of Priests and Bishops from all over India would have assembled here. They would have rushed and clamoured for even a glimpse of this body and for some precious relic or token of this person. I assure you, that as far as human judgment can be relied on, this young nun was not much less saintly than the Little Flower of Lisieux."

St Alphonsa had a unique relationship with Jesus Christ and she experienced his presence in her daily life. She is known to be a person who loved and invited sufferings in her life imitating her master. She would even ask for it. What does this apparently non-sensical yet theologically rich dimension of the spiritual life of St Alphonsa reveal to us? The answer to this riddle is found in the central role that Jesus played in her life. Her acceptance and love for suffering and her growth in the path of sanctity through such suffering and pain opens up the depth of her relationship with and in Jesus Christ and what became for her an experience of the redemptive value of suffering when joined to his suffering. This is what, in fact, makes her worthy of the honour of the altar universally.

Commenting on this aspect of her life, Fr C.C. Martindale SJ wrote: "The history of Sister Alphonsa will remain unintelligible unless we take into account the whole Catholic doctrine of the person and work of Our Lord. That this girl appreciated to the full the supreme importance of prayer should surprise no Christian; but there may be those who are disconcerted by her intense wish to suffer. We must insist that there was nothing morbid in this, and that no Catholic attaches any value to suffering as such, but only, as we said within the full doctrine of our Lord's redemptive work."

According to Catholic theology, suffering gains a new sense and value only in the light of the passion of Christ and its spiritual acceptance would mean a positive inclusion of God and others with a constant self-emptying of the victim concerned. Suffering thus understood, accepted and offered is a rare spiritual height for the Christian soul than a passive fatalistic resignation to one's problems or pain. As the Catechism of the Catholic Church teaches, the sufferings to be endured can mean that in one's flesh one completes what is lacking in Christ's afflictions for the sake of his Body, that is, the Church. Suffering becomes a participation in the saving work of Jesus.

A letter that St Alphonsa wrote reveals the redemptive dimension of the suffering of Christ as well as her own adherence to it. She wrote: "Since only grief and suffering have fallen to the lot of my Spouse, I too lovingly embrace them, and my soul is at peace, though my body continues to be tormented. For the last seven years I have ceased to be my own, being given over entirely to my Divine Spouse. You know all that; and now let the Lord do, as He will with me. It is not a cure I am anxious for, but only that His Holy Will be fulfilled in me." Thus, behind the suffering, St Alphonsa cheerfully accepted the truth of a living and loving encounter with Jesus Christ. She denied herself. She died to herself. She forwent everything imaginable of a personal sense of ownership or belonging. In this self-emptying, she gained everything in Jesus Christ.

Thus, Christ became the centre of St Alphonsa's life. She dethroned herself to enthrone Christ. She made him, with unerring vision, the focus of her life. This was very clearly expressed at the homily for the beatification of St Alphonsa, when St John Paul II said: "From early in her life, Sister Alphonsa experienced great suffering. With the passing of the years, the heavenly Father gave her an ever-fuller share in the Passion of his beloved Son. We recall how she experienced not only physical pain of great intensity, but also the spiritual suffering of being misunderstood and misjudged by others.... She came to love suffering because she loved the suffering Christ. She learned to love the Cross through her love of the crucified Lord."

As we are preparing to celebrate the feast of such an amazing saint, let us ask her to intercede for us so that we too may become worthy ministers of the Word and the Sacraments living a life fully in tune with the mind of Christ!

**CONCLUSION**

As you receive my circular, you will be busy preparing to celebrate the feast of St Thomas, the Apostle of India. While we take pride in call-

ing ourselves as St Thomas Christians, it is important that we know him well and make efforts to emulate some of the virtues that he excelled in. St Thomas refused to believe in the resurrection of Jesus without having a direct personal experience. When he had that experience, we find him to be a true believer: “My Lord and My God!”. Like St Thomas, we too need a personal encounter with the Lord so that our lives will become more enriching and our ministry more effective. May St Thomas intercede for each one of us so that we too can experience the risen Lord as he did!

With my prayers and blessings,



+George Rajendran SDB
Bishop of Thuckalay

---

## ஆயர் அருட்பொழிவு

கோட்டாறு மறைமாவட்டத்தின் அருட்தந்தை நஸ்ரேன் சூசை அவர்கள் ஜூன் மாதம் 29 அன்று புது ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டார். நமது மறைமாவட்டத்திலிருந்து அருட்தந்தையர்களும் இறைமக்களும் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்தினர். நமது மறைமாவட்ட அருள்தூது, புதிய ஆயர் அவர்களின் நேர்காணல் தொகுப்பை சிறப்பிதழாக வெளியிட்டு பிரதிகளை பங்கேற்றோருக்கு வழங்கி பெருமைச் சேர்த்தது. புதிய ஆயர் அவர்களும் தமது உரையில் இவ்விதழுக்கு வாழ்த்தும் நன்றியும் தெரிவித்தார்.



# இளையோர் பேரவை (Synod) 2018
## சுற்றுமடல்

Prot. No. 0918/2017

சீரோ மலபார் திருச்சபையின் தலைவர் கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி தனது உடன் பணியாளர்களான பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் அருட்பணியாளர்களுக்கும் துறவறத்தாருக்கும் தனது மேய்ப்பு பணிக்காக ஒப்படைக்கப்பட்டுள்ள எல்லா இறைமக்களுக்கும் எழுதுவதாவது.

ஈசோ மெசியாவில் அன்புமிக்க சகோதரர் சகோதரிகளே...

இளையோரின் மேய்ப்புப் பணியை மையமாகக் கொண்ட ஆயர் பேரவையானது (Syond) 2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடக்கவிருப்பதைக் குறித்த அறிவிப்பை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த ஜனவரி மாதம் 13ம் தேதி ஒரு கடிதம் வாயிலாக தெளிவுபடுத்தியிருந்தார். பேரவையின் மையச் சிந்தனைக்காக "இளையோர், நம்பிக்கையும் தேர்ந்து தெளிதலும்" (Young People, the Faith and Vocational Discernment), என்னும் தலைப்புத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளது. இதை வாழ்விற்கான இறையழைத்தலின் இயல்பை தேர்ந்து தெளிதல் அல்லது வாழ்க்கை பாதையை சரிவர தேர்ந்தெடுத்தல் என பொருள் தொடுக்கலாம். இளையோர் ஒவ்வொருவரும் தங்களைப்பற்றிய இறை திருவுளத்தை தெரிந்து கொள்வதற்கும் பிறரைப் புரிந்து கொள்ள வைக்கவும் ஊக்குவிக்கும் வண்ணம் திருத்தந்தை இப்பேரவையை ஏற்பாடு செய்துள்ளார்.

இப்பேரவையினுடைய தயாரிப்பு ஆவணத்தை பேரவையின் தலைமை செயலகம் 2017 ஜனவரி 13 அன்றே வெளியிடவும் செய்துள்ளது. இது வத்திக்கான் இணயதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதன் தமிழ் மொழியாக்கத்தை, தக்கலை மறைமாவட்ட இணையதளத் திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். இவ் ஆவணம் முன்வைக்கும் முக்கிய சிந்தனைகளை இக்கடிதம் வாயிலாக உங்கள்முன் வைக்க விழைகிறேன்.

1. **இளையோர் திருச்சபையின் மேய்ப்புப் பணியில் பங்கேற்றல்**

இளையோர் அனைவரும் வெவ்வேறான தளங்களில் வாழ்க்கையை மேற்கொள்கின்றவர்கள். கல்வி பயின்று வாழ்வின் தரத்தை உயர்த்தும் நோக்கில் வேலை தேடிக்கொள்ளும் இளையோர், அதன் வழியாக தங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்துகிறார்கள். பட்டப்படிப்புகள் பலவற்றிலும் கைதேர்ந்து வேலைபுரிவோர், படித்து முடித்த பின்பு சொந்த நாட்டில் வேலை வாய்புகள் சரிவர அமையாததால் வெளிநாடுகளில் வேலை செய்வோர், என பலவகையான தளங்களில் பல்வேறான முறைகளில் இளையோர்களின் வாழ்க்கை பயணிக்கின்றது. திருச்சபையின் தலைமை மேற்கொள்ளும் பல இயக்கங்களில் ஈடுபாடு செலுத்தி, தங்களின் திறமை களையும் செயல்பாடுகளையும் வளர்த்துகின்றவர்களும் ஏராளம் உண்டு. இதன் வழி சமூகத்தில், பொருளாதாரத்திலும் அரசியலிலும் மற்று கலாச்சாரத் துறைகளிலும் உயர்ந்த பதவிகளை பெற்று சிறப்பு பெறுகின்றவர்களும் ஏராளம். இவைகளிலிருந்தெல்லாம் வேறுபட்டு முழுமையாக செபத்திலும், இறைவார்த்தை பகிர்தலின் அனுபவங்களிலும், இறைபுகழ்பாக்கள் இசைப்பதிலும் தங்களை ஈடுபடுத்தி கொள்பவர்களும் ஏராளம் உண்டு. இன்னும் சிலர் திருத்தொண்டுப் பணிகளிலும் இயக்கங்களிலும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர். படிக்கின்ற காலத்திலும் அதன் பின்பும் எந்தவொரு இயக்கங்களிலோ துறைகளிலோ செயல்படாமல் திருச்சபையின் பொதுவான செயல்களில் மட்டும் ஈடுபட்டு தங்களின் வாழ்க்கையை மட்டும் மேன்மை படுத்தும் இளையோர்களும் உண்டு. இப்படி பலவிதமான தளங்களில் இயங்குகின்ற இளையோர்களை மனதில் கொண்டு அவர்களின் நிலைக்கு ஏற்றவாறு திருத்தொண்டுப் பணியில் அவர்களை ஈடுபடுத்த, மறைமாவட்டங்களும் பங்குகளும் திட்டமிட வேண்டும். அனைத்து தரப்பிலுமான இளையோர்களை திருச்சபையின் மேய்ப்பு பணியில் பங்கேற்க வைக்கும் விதமாக, பங்களவிலும் மறைமாவட்ட அளவிலும் தனித் திருச்சபை அளவிலும் அவர்களை ஒருங்கிணைத்து ஊக்கமூட்ட, அருட்தந்தையரும் ஆயர்களும் ஆர்வம் கொள்வதோடு பல்வேறு

முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

## 2. இளையோருக்கு திருத்தொண்டு புரிவது இளையோரின் பணி

இளையோருக்கு திருத்தொண்டு புரிவது இளையோரின் பணி என்பதை மேய்ப்பர்களும் இளையோரும் ஒருங்கே புரிந்து கொள்ள வேண்டும். நற்செய்தியின் உட்பொருளை புரிந்து கொள்ளவும் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக மாறவும் இளையோரை பக்குவப்படுத்து வதில் மேய்ப்பு பணியாளர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இளையோர் இப்பேற்பட்ட பயிற்சிகளிலும் சிந்தனை உருவாக்கத்திலும் முழுமையான பங்கேற்பு அளிக்க வேண்டும். மட்டுமல்ல, இவை தங்களுடைய கடமை மற்றும் தேவை என்பதனை நன்கு புரிந்து செயல்பட வேண்டும். திருச்சபையையும் சமூகத்தையும் புதுப்பிக்கின்ற வர்களாகவும் இளையோர் மாற வேண்டும். இதற்கு மேய்ப்பு பணியாளர்கள் இளையோரோடு சேர்ந்து பயணிக்க வேண்டும். இளையோரின் மறைபரப்புப் பணியில் இளையோரை ஊக்குவிப்பது மேய்ப்பர்களின் தலையாய கடமை. திருச்சபையின் எல்லா சேவைகளையும் இளையோரின் நலன் ஒன்றே கருத்தில் கொண்டு முன்னெடுத்தால் உரிய பலன் கிடைக்கும்.

திருச்சபையிலும் சமூதத்திலும் சுதந்திரமாக செயல்படவே இளையோர் விரும்புகின்றார்கள். சுதந்திரத்திற்கு முட்டுக் கட்டைப் போடுகின்ற அதிகார மேட்டிமை மிக்க செயல்பாடுகளோ சீர்திருத்தங்களோ, சட்ட முறைமைகளையோ இன்றைய இளையோர் விரும்புவதில்லை. ஆனால் கலந்தாய்வுகளிலும் கருத்துகள் பரிமாற்றத்திலும் அவர்களையும் உட்படுத்தி மேற்கொள்கின்ற தீர்மானங் களில் இளையோர் ஆர்வத்தோடு பங்கேற்பார்கள். அதுபோலவே இளையோரோடும் அவர்களின் இயக்கங்களோடும் மேய்ப்புப் பணியாளர்களும் இணைந்து பணியாற்ற வேண்டும்.

இளையோர்ப் பணியை மையமாகக் கொண்ட ஆயர் பேரவையானது நம்பிக்கையை முக்கிய மையப்பொருளாகக் கொண்டுள்ளது. கிறிஸ்துவின்பால் கொள்ளும் அன்பும், திருச்சபையோடு ஏற்படுத்திக் கொள்ளும் உறவும் இளையோருக்கு அவசியமாக இருக்கிறது. கிறிஸ்துவோடு கொள்ளும் உறவின் பயனாகவே, தனிப்பட்ட

வாழ்வில் இலட்சியத்தையும் திருச்சபையோடும் சமூகத்தோடும் இணைந்துள்ள வாழ்வில் நோக்கத்தையும் அடைய முடியும். அதற்காக ஒவ்வொருவரும் சுயநலக் கோட்டைக்குள் அடைபடாமல் வெளியே வர வேண்டும். ஆபிரகாம் தனது நாட்டையும் வீட்டையும் உறவினர்களையும் உடமைகளையும் விட்டுவிட்டு கடவுள் காண்பித்த நாட்டிற்கு சென்றது போல உலகத்தில் தங்களை அடிமைப் படுத்துகின்ற அனைத்து அநீதிகளிலிருந்தும் அக்கிரமங்களிலிருந்தும் விடுபட்டு நீதியை நிலை நாட்டுகின்ற ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்ப இன்றைய இளையோர்கள் முன்வர வேண்டும். இதற்கு தேவையான படிப்பினைகளையும் தியாகங் களையும் இக்கட்டுகளையும் நல்மனதோடு ஏற்பதற்கு இளையோர்கள் பக்குவபட வேண்டியது அவசியமாகும். மனப்பூர்வமாக மனம்திறந்து கிறிஸ்துவிற்காக சாட்சியாக மாறவும் கிறிஸ்தவ நன்னெறிகளில் நிலைநின்று திருச்சபைக்காக பணி செய்யவும் இளையோர்கள் முன்வரவேண்டும்.

**3. இளையோர் மறைபரப்புக்கு ஏற்ற சூழல்களின் அவசியம்**

தங்களின் இறையழைத்தலை சரிவர புரிந்து கொள்ள, அதாவது ஒவ்வொரு இளையோரும் தத்தமது வாழ்க்கைப் பாதையை தேர்ந்தெடுப்பதற்கு ஏற்றச் சூழல் திருச்சபையில் இருக்க வேண்டும். திருமுழுக்கு யோவானின் சீடர்களைப் போல "ரபி, நீர் எங்கே தங்கி யிருக்கிறீர்?"(யோவ 1:38) என வினவுகின்றவர்கள் தான் இன்றைய இளையோர். அதற்கு பதிலுரையாக "வந்து பாருங்கள்" என்று இயேசு இன்றும் கூறுகிறார். நற்செய்தியில் காணக்கிடக்கும் இயேசுவை நோக்கிப்பார்க்கவும், தொடக்கத் திருச்சபையில் நிலவிய ஆழமான விசுவாச வாழ்வின் நெருக்கமும், உறவின் ஆழமும் இன்றைய உலகில் அவசியமாக இருக்கிறது. திருச்சபையின் மேய்ப்பு பணியாளர்களிடமிருந்து அதிகார கர்வமோ, துர் மாதிரிகளோ, இயலாமையோ, ஆன்மீக வீழ்ச்சிகளோ தென்படு மாயின் இளையோர்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாவார்கள். ஆன்மீக எழுச்சிக்காகவும் வாழ்க்கை அனுபவங்களுக்கா கவும் அவர்கள் மாற்றுப் பாதைகளை தேர்வு செய்ய நேரிடும். ஆதலால் திருச்சபையில் விழிப்புணர் வோடு செயல்படுத்த வேண்டிய தொன்றாக இளையோர் பணி

விளங்குகிறது.

**இளையோரோடு ஒரு வார்த்தை:**

இயேசு கிறிஸ்துவை விட மேலான ஒரு கொடையை கடவுளால் இவ்வுலகிற்கு கொடுப்பதற்கில்லை. தம் சொந்த மகனையே உலகிற்கு அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின் மீது அன்பு கொண்டார் என்பதே அதன் தனிச்சிறப்பு. இயேசுவின் நற்செய்தியின் மகிழ்ச்சியும் இதுதான். கடவுள் இயேசு கிறிஸ்து வழியாக நம்மை அன்பு செய்கிறார். அவருடைய இரக்கத்தை நமக்கு அருளுகின்றார். இந்த அன்பும் இரக்கமும் தான் கிறிஸ்தவ வாழ்வை மேன்மையுறச் செய்கிறது. "நமது சமயத்தின் மறைஉண்மை உயர்வானது" (1திமொ 3:16) என தூய பவுலடியார் திமொத்தேயுவிடம் கூறுவதன் பொருளும் இதுதான். எல்லா சமயங்களிலும் நன்மைகள் உண்டு. எல்லா நன்மைகளும் கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ள கூடியதுமாகும். அனைத்து நன்மைகளுக்கும் உருவமாக இருக்கின்றவர் தான் ஈசோ. ஆயிரக்கணக்கான புனிதர்களுக்கு உந்து சக்தி யாகவும், சாட்சிய வாழ்விற்கான மாதிரியாகவும் விளங்கும் கிறிஸ்துவை முழுமையாக நம்முடைய வாழ்க்கையில் ஏற்றுக் கொள்வோம். உண் மையாக அவரை பின் தொடர்ந்து வாழ்வையும் சமர்ப்பணம் செய்வோம். திருச்சபையோடு இணைந்து வாழ்ந்தால் மட்டுமே கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவும், அவரது பாதையை பின் தொடரவும் முடியும். திருச்சபையின் ஒன்றிப்பிலிருந்து கிடைக்கின்ற இறைவார்த்தை அனுபவங்களும், திருவருட் சாதனங்களின் உட்கொள் ளுதலும், செப வாழ்வும், உறவியங்களின் செயல் பாடுகளும், பக்த சபைகளின் முயற்சிகளும் கிறிஸ்துவை தனிப்பட்ட வாழ்வில் ஏற்றுக் கொள்ளவும் பிறருக்கு சான்றாக மாறவும் இளையோரை தூண்டும் கருவிகளாக விளங்கு கின்றன. இதன் வாயிலாக திருச்சபையின் புதுப்பித்தலில் பங்கேற்கவும் சமுதாயத்தின் வளர்ச்சியில் ஈடுபாடு கொள் ளவும் இளையோரால் முடியும். பேரவை மேற்கொள்ளும் விவாதங்களின் போது இத்தகைய சிந்தனைகள் மேலோங்கி நிற்கும் என நம்புகிறேன்.

[ஆயத்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு, மறைமாவட்டங்களிலும், துறவற சமூகங்களிலும் விவாதங்கள்

நடத்தப்பட வேண்டும். இளையோர் இயக்கங்களிலும், மையங்களிலும் இவ் ஆவணம் விவாதிக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். பங்குதளங்களிலும் கல்லூரிகளிலும் உள்ள அனைத்து இளைஞர்களையும் ஒன்றிணைத்து, விவாதங்கள் நடத்துவதோடு அவர்களின் கருத்துக்களை கோர்வையாக்கி ஜூலை 30 ஆம் தேதிக்குள் (மாத இறுதிக்குள்) சீரோ மலபார் தலைமைச் செயலகத்துக்கு மறைமாவட்ட ஆயர் அனுப்பி வைக்க வேண்டும். மறைமாவட்ட இளையோர்ப் பணி இயக்குநர்கள், ஆயரின் அறிவுரைகளை ஏற்று இதைச் செயல்படுத்த தனிக்கவனம் செலுத்த வேண்டும். அத்தோடு அனைத்து அருட்தந்தையர்களும் இதற்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.]

ஈசோவில் அன்புடன்
+ கர்தினால் ஜார்ஜ் ஆலஞ்சேரி
சீரோ மலபார் திருச்சபையின் தலைவர்.

---

## அருட்சகோதரர்களிடமிருந்து...

அருட்சகோதரர்கள் அனைவரும் இறையருளால் நன்றாக உள்ளனர். உஜ்ஜயின் குருத்துவக் கல்லூரியில் பயிலும் அருட்சகோதரர்களின் பல்கலைக்கழகத் தேர்வு ஜுன் 21 அன்று நிறைவு பெற்றது. 2017-18 ஆம் கல்வியாண்டு வகுப்புகள் ஜுலை 3 அன்று தொடங்கப்பட உள்ளது. அருட்சகோதரர் டோஜி அவர்கள் பயிலும் குருத்துவக்கல்லூரியும் இதே நாளில் திறக்கப்பட உள்ளது.

திருத்தொண்டன் ஜெபனேஷ் தற்போது பங்குத்தள அனுப வத்திற்காக திருச்சூர் மறைமாவட் டத்துக்குட்பட்ட வெலுார் பங்கில் மே 17 முதல் பணியாற்றி வருகிறார். இப்பயிற்சி ஆகஸ்ட் 31 அன்று நிறைவடைய உள்ளது.

உரோமையில் இறையியல் மூன்றாம் ஆண்டு நிறைவு செய்த திருத்தொண்டர் சுபின் இறுதிகட்ட படிப்புக்காக ஆலுவா மங்கலப்புழ இறையியல் கல்லூரியில் ஜுலை 9ம் தேதி இணைந்துள்ளார். அதுபோல உரோமையில் பயிலும் அருட்சகோதரர் ஷிஜோ மேய்ப்புப் பணி பயிற்சிக்காக மறைமாவட்டத்தில் வந்துள்ளார். பயிற்சிக்கு பின் உயர்கல்விக்காக செப்டம்பர் மாதம் உரோமிற்கு திரும்புவார்.

அருட்சகோதரர் டோஜி
தலைவர்

| MARCH | FEAST DAY OF REV. FATHERS |
|---|---|
| 03 | Fr. Robins Kuzhikodil |
| 03 | Fr. Thomas Powathuparampil |
| 03 | Fr. Jiji Koipuram |
| 03 | Fr. Tinu Kottackaparampil CMI |
| 03 | Fr. Thomas Sathiyanesan |
| 03 | Fr. Ajeesh Attiyil |
| 03 | Fr. Abin Poovathummoottil |
| 15 | Fr. Kurian Kunnumpuram MST |
| 15 | Fr. Linslal Mangalath |
| 25 | Fr. Shojo Erupathanchilchira |
| 25 | Fr. Toji Parampilparampil |
| 25 | Fr. Chacko Basil CMI |
| 25 | Fr. Jacob Aiyammatra |
| 25 | Fr. Chacko Akkathara |
| 25 | Fr. Vinod Kanakalil |

| MAR | BIRTHDAY OF REV. FATHERS |
|---|---|
| 07 | Fr. Mathew Mulangasserry |
| 16 | Fr. George Panamthottam CMI |
| 21 | Fr. Kurian Mathew Koipuram |

## வருவிருக்கும் நிகழ்வுகள்

ஜூலை 3 : தலைவாசல் நிறுவுதல், கழுவன்திட்டை ஆலயம்
ஜூலை 8-12 : தமிழ்நாடு ஆயர் பேரவை, வேளாங்கன்னி
ஜூலை 14-16 : திருமண தயாரித்தல் கருத்தரங்கு, சங்கமம்
ஜூலை 15 : அருட்பணிப் பேரவை, சங்கமம்
ஜூலை 18 : அருட்தந்தையர்கள் கூடுகை,
சங்கமம் விரிவாக்கக் கட்டிடம் மந்திரிப்பு
ஜூலை 29 : நடைபயணம், அல்போன்சா திருத்தலம் நாகர்கோவில்
ஜூலை 30 : திருப்பயணம், அல்போன்சா திருத்தலம் நாகர்கோவில்

# HOLY CHILDHOOD
# குழந்தை ஈசோ

> "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக" (லூக் 4:8)

**ஆண்டுவிழா**

குழந்தை ஈசோ இயக்க ஆண்டுவிழா 03.06.2017 அன்று மதியம் 2 மணியளவில் கல்லுவிளை ஆசீர் அரங்கில் குருகுலமுதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிள்ளியூர் தேவமாதா மழலையர் வரவேற்புரை நிகழ்த்தினர். அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்களும், குழந்தைகள் 'தினமும் திருப்பலியில் கலந்து கொள்ளவேண்டும்' என்று திரு குமரித்தோழன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். மனதை மகிழ வைக்கும் சிட்டுக் குழந்தைகளின் வர்ணமிகு, சிந்தனை செறிவு மிக்க கலை நிகழ்ச்சிகள் அவைக்கு விருந்தாக




சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றியதோடு குருகுல முதல்வர் அவர்கள் 'குழந்தைகள் எறும்புகள் போல சுறுசுறுப்பானவர்கள்' என்ற கருத்தில் தலைமையுரையாற்றினார். 'சிறுவயதில் கற்பவை எல்லாம் வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்கும்' என்று அமைந்தன. நிகழ்வை இயக்குநர் அவர்கள் ஒருங்கிணைத்திருந்தார். கிள்ளியூர் குழந்தை ஈசோ இயக்க குழந்தைகள் நிகழ்வை தொகுத்து வழங்கினர். இந்நிகழ்வில் ஏராளமான குழந்தைகளும் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

அருட்தந்தை ஜோமோன், இயக்குநர்

# சிறுமலர் MISSION LEAGUE

# சிறுமலர் மிஷன் லீக் இயக்கம்...

**சிறுமலர் இயக்க ஆண்டுவிழா**

தக்கலை மறைமாவட்ட சிறுமலர் இயக்க 2016-2017 ஆம் ஆண்டுவிழா மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் 25.6.2017 அன்று படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட அரங்கில் மதியம் 2.30 மணியளவில் நடைபெற்றது. சூசைபுரம் மறைவட்டத்தினர் இறைவேண்டல் பாட இயக்குநர் தந்தை அவர்கள் அனைவரையும் வரவேற்றார். செயலர் ஓராண்டு கால செயல்பாடுகள், வளர்ச்சி ஆகியவற்றை அறிக்கையாக சமர்ப்பித்தார்.

பின்னர் விழாத்தலைவர் ஒளியேற்றி மிஷன்லீக் உறுப்பினர்களின் கடமைகள், செயல்பாடுகள், செபவாழ்வு பற்றி தலைமையுரையாற்றினார். தொடர்ந்து நடனம், செய்கைப் பாடல், நாடகம் போன்ற கலைநிகழ்சிகள் நடைபெற்றன. துணை இயக்குநர் ஜோஸ் வயலில் அவர்கள் பாதுகாவலி குழந்தைத் தெரசா வழி ஆசீர் பெற்றிட வாழ்த்தினார். தொடர்ந்து அருட்சகோதரி தீபா எஸ்.டி அவர்கள் தலைமையில் முஞ்சிறை மக்களால் உருவாக்கப்பட்ட மிஷன் லீக் கையேடை குருகுல முதல்வர் அவர்கள் வெளியிட அதன் முதல் பிரதியை அருட்சகோதரி தீபா அவர்கள் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து புதிய கல்வியாண்டு திட்டங்கள் செயல்பாடுகள் பற்றிய நகல் வழங்கப்பட்டது. சிறுமலர் இதழின் வளர்சிக்காக பாடுபடும் உறுப்பினர்களுக்கு ஊக்கப் பரிசும், சிறந்த மிஷன்லீக் அலகிற்கான பரிசும் வழங்கப்பட்டன. இவ்வாண்டு சூசைபுரம் தூய சூசையப்பர்



அலகு தட்டிச்சென்றது. இறுதியாக செயலர் அனைவருக்கும் நன்றி கூற நித்திரவிளை மறைவட்ட உறுப்பினர்களின் இயக்க கீதத்துடன் நிறைவு பெற்றது. அனைவருக்கும் தேநீர் விருந்தும் வழங்கப்பட்டன.

அருட்தந்தை ஷோஜோ
இயக்குநர்

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

## தலைவர்களுக்கான பயிற்சி

தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கத்தின் தலைவர்களுக்கான ஒருநாள் பயிற்சி 25.6.2017 ஞாயிற்றுக்கிழமை படந்தாலுமூடு திரு இருதயப் பள்ளி வளாகத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது. இக்கூட்டத்தின் முதல் அமர்வை இயக்குநர் அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் ‘ ‘தலைவர்களுக்கான பண்புகளும் கடமைகளும்’ என்ற சிந்தனையில் உரையாடல் வழியாக நடத்தினார். இரண்டாம் அமர்வை அருட்தந்தை தங்கச்சன் சச அவர்கள் நல்ல தலைவர்களுக்கான பண்புகள் பற்றி விளையாட்டுகள் மூலம் வழிநடத்தினார். இந்நிகழ்வில் துணை இயக்குநர் அருட்தந்தை ஜாண் அவர்களும் உடனிருந் தார்கள். மாலை 4.30 மணியளவில் இனிதே இக்கூடுகை நிறைவு பெற்றது.



## மேற்படிப்பில் அருட்தந்தை பெலிக்ஸ்

கடந்த மூன்றாண்டுகளாக தக்கலை மறைமாவட்ட இளையோர் இயக்குநராக பணி யாற்றிய அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் ஜூலை 1 முதல் ஸ்ரீபெரும்புதூர் ராஜிவ் காந்தி நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் யூத் டெவலப்மென்ட் நிறுவனத்தில் மேற்படிப்பை தொடர உள்ளார். அதற்காக நமது மறைமாவட்டத் திலிருந்து கடந்த ஜூன் மாதம் 29 அன்று விடைபெற்றார். அன்னார் அவர்களை புதிய இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் மறைமாவட்ட இளைஞர்கள் சேலத்தில் அமைந்துள்ள அருட் தந்தை அவர்களின் இல்லத்தில் கொண்டு சேர்த்து தந்தை அவர்களின் கல்விப் பணி தொடர வாழ்த்தினர்.



செல்வி பபிஷா
செயலர்




# தக்கலை மத்திய சபைச் செய்திகள்

## நித்திரவிளை வட்டார சபை

### திட்ட உதவி

நித்திரவிளை ஜெய மாதா கிளைச்சபை சார்பில் 18.6.2017 அன்று 8 நபர்களுக்கு ரூ.10,000/- வீதம் திட்ட உதவி அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது. வட்டாரசபைத் தலைவர் சகோ. ஜோஸ் மற்றும் மத்தியசபை திட்ட கண்காணிப்பாளர் சகோ. ஷிபு மோன் அவர்களும் கலந்து கொண்டனர்.

### புதிய பொறுப்பாளர்கள் தேர்வு

முஞ்சிறை புனித டோமினிக் மகளிர் கிளைச்சபையின் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு 18.6.2016 அன்று அருட்தந்தை அஜீஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தேர்தலை தேசிய சபை துணைத் தலைவர் சகோ சௌந்தரராஜ் மற்றும் வட்டாரசபை தலைவர் சகோ ஜோஸ் ஆகியோர் இணைந்து வழிநடத்தினர்.

## மஞ்சாலுமூடு வட்டார சபை

### கல்வி மற்றும் மருத்துவ உதவி

மாலைக்கோடு புனித அகஸ்டின் மகளிர் கிளைச்சபைச் சார்பில் கல்வி உதவி ரூ.2500 மற்றும் மருத்துவ உதவி ரூ.1000 தலா ஒருவருக்கு வழங்கப்பட்டது.

ஜார்ஜியார் ஆண்கள் கிளைச் சபையினர் தத்துக்குடும்பத்திற்கு மருத்துவ உதவியாக ரூ.1000 வழங்கினர்.

### இல்லம் மந்திரிப்பு

முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆண்கள் கிளைச்சபை சார்பில் ஏழை ஒருவருக்கு கட்டி கொடுக்கப்பட்ட இல்லம் 11.6.2017 அன்று அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்களால் மந்திரிக்கப்பட்டது.

### தையல் இயந்திரம்

மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் கிளைச்சபை சார்பில் பெண்மணி ஒருவருக்கு தையல் இயந்திரம் வாங்கி கொடுக்கப்பட்டது.

## சூசைபுரம் வட்டார சபை

### வட்டார சபை ஆண்டுவிழா

வட்டார சபை ஆண்டுவிழா 13.8.2017 அன்று கிள்ளியூர் தேவமாதா ஆலயத்தில் கொண்டாட திட்டமிட்டுள்ளனர்.

### நோட்டு புத்தகங்கள்

சூசைபுரம் ஆண்கள் கிளைச்சபையினர் 5 மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தனர்.

### உள்ளூர் நன்கொடை

பிலாங்கரை ஆண்கள் மற்றும் பெண்கள் கிளைச்சபையினர் உள்ளூர் நன்கொடையாக ரூ.2800 திரட்டினர்.

**கிளைச்சபை பார்வை**

04.06.2017 அன்று வட்டார சபைத் தலைவர் சகோ. சோனிக் அவர்கள் கிள்ளியூர் ஆலயத்தில் செயல்படும் கிளைச்சபைகளை பார்வையிட்டார்.

**மருத்துவ உதவி**

மாதாபுரம் பெண்கள் கிளைச்சபையினர் நோயாளி ஒருவருக்கு ரூ.4000 மருத்துவ உதவியாக வழங்கினர்.

**திட்டக் கடன்**

தக்காளிவிளை ஆண்கள் கிளைச்சபையினர் ரூ.55,000/- திட்டக் கடன் வழங்க திட்டமிட்டு வருகின்றனர்.

சகோ. ஷாஜன்,
செய்தித்தொடர்பாளர்.

## நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலத் திருவிழா

சீரோ மலபார் திருச்சபையின் முதல் புனிதையான புனித அல்போன்சாவின் திருவிழா கொண்டாட்டம் ஜூலை 21 முதல் 30 வரையிலான நாட்களில் நமது மறைமாவட்டத்தில் நாகர்கோவிலில் உள்ள புனித அல்போன்சா திருத்தலத்தில் நடைபெற உள்ளது. இந்நாட்களில் நடைபெறுகின்ற திருப்பலிகளிலும் நவநாள் செபங்களிலும் மற்று செப வழிபாடுகளிலும் கலந்துகொள்ளவும், மறைமாவட்ட இறைமக்கள் திருப்பயணம் மேற்கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

### சிறப்பு நிகழ்வுகள்

ஜூலை 21: திருப்பலி பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம்
(குருகுல முதல்வர் தக்கலை மறைமாவட்டம்)
ஜூலை 25: திருப்பலி (மலங்கரை முறை)
ஆயர் மார் வின்சென்ட் பவுலோஸ்
மார்த்தாண்டம் மறைமாவட்டம்
ஜூலை 28: திருப்பலி (லத்தீன் முறை)
புதிய ஆயர் நஸ்ரேன் சூசை
கோட்டாறு மறைமாவட்டம்
ஜூலை 29: நடைபயணம்
ஜூலை 30: திருப்பலி ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன்
தக்கலை மறைமாவட்டம்

மறைமாவட்டச் செய்திகள்



# மறைமாவட்டச் செய்திகளும் நிகழ்வுகளும்

**ஜெர்மனியில் மேய்ப்பு பணி**

நமது மறைமாவட்டத்தின் ஆவணக் காப்பாளராக கடந்த ஒன்பது ஆண்டுகள் பணியாற்றிவந்த பேரருட்தந்தை கிறஸ்துதாஸ் அவர்கள் ஜூன் 29 அன்று மேய்ப்பு பணிக்காக ஜெர்மனியில் உள்ள றோட்டன்பெர்க் ஸ்றுட்கார்ட் மறைமாவட்டத்திற்கு பயணமானார். அவரது பணி சிறக்க வாழ்த்துக்கள்.

**கட்டுமானப் பணி**

கடந்த பத்து ஆண்டுகளாக முடங்கி கிடந்த கழுவன்திட்டை புனித மார்ட்டின் டி போறஸ் ஆலயக் கட்டுமானப் பணிகள் ஜூலை 3 முதல் மீண்டும் துவங்கப்பட்டுள்ளது. பங்குமக்கள் மற்றும் பங்குத்தந்தை அருட்தந்தை ஷோஜோ அவர்கள் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் விரைவில் நிறைவடைய செபிக்கவும்.

**ஆண்டு தியானம்**

அருட்தந்தையர்களுக்கான ஆண்டு தியானம் வருகின்ற அக்டோபர் மாதம் 15ம் தேதி முதல் 19 வரை 5 நாட்கள் தலச்சேரி மறைமாவட்ட சேர்ந்த அருட்தந்தை ஜோசப் பாம்பிளானி அவர்களின் வழிகாட்டலில் நடைபெற உள்ளது.

**துறவறத்தார் கூடுகை**

மறைமாவட்ட அருட்பணியாளர்கள் மற்றும் துறவறத்தார்களின் கூடுகை வருகின்ற ஆகஸ்ட் மாதம் 15 அன்று நாகர்கோவில் புனித அல்போன்சா ஆலயத்தில் வைத்து நடைபெறும். துறவறத்தின் யூபிலி கொண்டாட்டங்களும் இத்தோடு நடைபெறும்.

**தாயகத்திற்கு திரும்புகின்றனர்**

அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் மற்றும் அருட்தந்தை ஜினு ஜேக்கப் தங்கள் படிப்பு மற்றும் பணிகளை நிறைவு செய்து செப்டம்பர் மாதம் மறை மாவட்டத்திற்கு திரும்புகின்றனர்.

**கட்டிட மந்திரிப்பு**

சங்கமத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள கட்டிடத்தின் மந்திரிப்பு ஜூலை 18 அன்று மாலை 6 மணிக்கு நடைபெறும். அதற்கு முன்னதாக மாலை 3 மணிக்கு அருட்தந்தையர்களின் கூடுகை நடைபெறும். தொடர்ந்து கட்டிட மந்திரிப்பு, ஆராதனை மற்றும் ஒப்புரவு நிகழ்வுகளும், இரவுணவும் நடைபெறுகின்றன.

# மறைவட்ட செய்திகள்

## நித்திரவிளை மறைவட்டம்

### பிரிவு உபசார விழா

நித்திரவிளை ஜெயமாதா ஆலய பங்குத்தந்தையாகவும், நித்திரவிளை வட்டார இயக்குநராகவும் பணியாற்றி வந்த பேரருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் ஜெர்மனியில் இறை பணிக்காக செல்ல இருக்கிறார். அவர்களின் பிரிவு உபசார விழா 25.6.2017 அன்று திருப்பலிக்குப் பின் நடைபெற்றது. தந்தை அவர்கள் ஆற்றிய பணிகளுக்கு நன்றியும், பாராட்டும் தெரிவித்து, இறைபணி சிறக்க இறைமக்கள் வாழ்த்தினர். தந்தை அவர்கள் ஏற்புரையாக தன்னோடு கொண்ட அன்பிற்கு நன்றி தெரிவித்து, தனக்காக செபிக்கவும் கேட்டுக்கொண்டார்.

### பணியேற்பில்...

25.6.2017 அன்று மாலை நித்திரவிளையின் புதிய பங்குத் தந்தையாக அருட்தந்தை சனில் பந்திச்சிறக்கல் அவர்கள் மாலை 4 மணியளவில் வருகை தந்து பொறுப்பேற்றுக் கொண்டார்.

### ஒப்புரவு, நற்கருணை ஆராதனை

கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 10.6.2017 அன்று காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணிவரை ஒருநாள் திருப்பலி, நற்கருணை வழிபாடு, ஆற்றுப்படுத்துதல் மற்றும் ஒப்புரவு நிகழ்வுகள் நடைபெற்றன.




## சூசைபுரம் மறைவட்டம்

### பெயர் கொண்ட விழா

சூசைபுரம் புனித சூசையப்பர் வட்டார முதன்மை தந்தை அருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்களின் பெயர் கொண்ட திருநாள் ஜூன் 13 அன்று கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். 19.06.2017 அன்று திருப்பணி யாளர்கள் கூடுகை அருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

### ஆலயத் திருவிழா

மாதாபுரம் புனித தோமையார் ஆலயத் திருவிழா 29.6.2017 முதல் 03.7.2017 வரை நடைபெற உள்ளது.

மாங்கரை புனித வியாகப்பர் ஆலயத் திருவிழா ஜூலை 16 தொடங்கி 25 நிறைவடையும்.

### பிரியாவிடை பணியேற்பு

கடந்த 6 ஆண்டுகளாக பாலப்பள்ளம் மறைக்கல்வி தலைமை யாசிரியையாக பணியாற்றிய முனைவர் ஜாக்குலின் அவர்களின் பிரியாவிடை மற்றும் புதிய தலைமையாசிரியை அருட்சகோதரி லிற்றி எஸ்.ஏ.பி.எஸ் அவர்களின் பணியேற்பு நிகழ்வுகள் 25.6.2017 அன்று நடைபெற்றன.

தகவல் சேகரிப்பு: திருமதி ஹேமா|சினேக லதா|செலின் மேரி

## BISHOP'S ENGAGEMENTS JULY 2017

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 11.00 am | Departure from Frankfurt, Germany |
| 2 | **Sun** | 05.00 pm<br>05.15pm | Arrival at Trivandrum<br>Muzhucode: Feast day Holy Qurbana |
| 3 | Mon | 08.30am | Kazhuvanthittai: Feast day Holy Qurbana Blessing of Church Doorstep |
| 4 | Tue | 06.00pm | Pathukani: Feast Day Holy Qurbana |
| 5 | Wed | | Bishop's House |
| 6 | Thu | 06.00pm | Bengiri: Feast Day Holy Qurbana |
| **7** | **Fri** | | **Bishop's House** |
| **9-11** | **Sun** | | **TNBC, Velankanni** |
| 12 | Wed | | Bishop's House |
| 13 | Thu | 10.00am | Changanassery: Inter Dioceses Meet |
| 14 | Fri | | Bishop's House |
| 15 | Sat | 10.00am | Sangamam: Pastoral Council Meeting |
| **16** | **Sun** | **07.30am** | **Palappallam: Pastoral Visit** |
| 17 | Mon | 06.00pm | Visit to Minor Seminary |
| 18 | Tue | 03.00pm | Priests Conference \|Blessing of Sangamam Extension |
| 19 | Wed | | Bishop's House |
| 20 | Thu | 04.00pm | Industry Blessing of Mr. Praveen |
| 21 | Fri | | Bishop's House |
| 22 | Sat | | Visit to Shenkottai Mission |
| **23** | **Sun** | **09.00am** | **Kayalpuram: Anniversary Holy Qurbana** |
| 24-27 | Mon | | Bishop's House |
| 24 | Wed | 09.30 am | Curia Meeting \| Pala: Bishop's House |
| 25 | Thu | 10.00 am | Kodumpidi, Pala: Retreat Inaugural Mass at Thabor |
| 26 | Fri | 11.00 am | Pacha: Visit to George Kutty's Family |
| 27 | Sat | 10.30 am | Marriage Qur. Pushpagiri \|Pacha: 25 Death Anul. Qur |
| **28** | Fri | 5.00pm | **Feast of St. Alphonsa** \| Alphonsa School Day |
| **30** | **Sun** | **09.30am** | **Nagercoil: Feast Day Holy Qurbana** |
| 31 | Mon | 06.00pm | CMC Thuckalay: Holy Qurbana for the Visit of Superior General |

**Fr. Thomas Sathianesan**
Eparchial Chancellor



VISIT BY PAUL ALAPATT
BISHOP OF RAMANATHAPURAM - JUNE 29




MISSION LEAGUE 2017-2018
INAUGURATION OF ACTIVITIES IN TAMIL NADU - MAY 27



CATECHISM INAUGURATION 2017-2018
KALLUVILAI - JUNE 04



Fathers and Brothers in Rome with the Bishop
June 28

For Private Circulation Only
IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570